# 1B செயல்முறைப் பகுதி

## 1. ட்யோர்ட்யே டம்யனிவிக்: வியென்னாவில் பா.மொ.க ஆசிரியராக எனது தொடக்கம்

ட்யோர்ட்யே டம்யனிவிக் பொஸ்னியா/ஹேர்சேகொவினாவைச் சேர்ந்தவர். வியென்னாவில் 22 ஆண்டுகள் வாழ்ந்த அவர் அங்கு நீண்டகாலமாக பொஸ்னியா/க்ரோசியன்/சேர்பியன் பா.மொ.க ஆசிரியராகப் பணி செய்தவர்.

ஒஸ்ரியாவிற்கு வருவதற்கு முன், குறோசியாவில் நான் தொழில்நுட்ப கைவினையில் ஒரு பட்டயம் பெற்றேன். இந்தப் பாடத்தை ஸகிறெப் என்னும் இடத்தில் கற்பித்தேன். போர் காரணமாக யுகோஸ்லாவியாவை விட்டு 1992 ஆம் ஆண்டு வியெனாவிற்கு வந்தேன். வியெனாவிலுள்ள ஏதிலிப் பிள்ளைகளுக்கான முதல் ஆண்டு ஆசிரியராக எனது பட்டறிவு எனது மாணவர்களினது பட்டறிவுடன் எல்லா விதத்திலும் ஒத்ததாக இருந்தது. அவர்களைப் போலவே நானும் ஒரு ஏதிலியாக இருந்தேன். நானோ அவர்களோ இங்கு விரும்பி வரவில்லை. நாங்கள் வரவேண்டியதாயிற்று. அவர்களோ நானோ ஜேர்மனிய மொழியைப் பேசவில்லை. தற்செயலாக நாங்கள் வகுப்பறையில் சந்தித்தோம்.

நான் இரண்டாம் நிலை பாடசாலையில் பணியாற்றிக் கொண்டிருந்தேன் தொழில்நுட்பக் கைவினைப் பாடத்திற்காக மட்டுமே எனது திறமை தேர்வுக்குட்படுத்தப்பட்டது. பின்பு நான் எனது மாணவர்களின் தாய்மொழியிலே ஒஸ்ரிய வரலாறு புவியியல் மற்றும் ஏனைய பாடங்களை கற்பிக்க வேண்டும் என்று கூறினர். ஜேர்மனிய மொழி அறிவு குறைவாக இருந்த போதும் ஒஸ்ரிய பள்ளி நூல்களைச் சார்ந்தே இருக்கவேண்டியிருந்தது. அந்த நேரத்தில் எப்போதும் முன்பு செய்திருக்காதவாறு பாடத்திட்ட தயாரிப்பை குறுகிய நேரத்திலேயே தயாரிக்கக் கற்றுக் கொண்டேன் நாங்கள் அனைவருமே பயிலுநர்களாகவே இருந்தோம். வேறுபட்ட பின்னணிகளிலிருந்து வந்து கல்விக்காக மாற்று விதிகளுடன், எனது மாணவர்கள் தமது விருப்பங்களுக்கேற்ப வெற்றி பெற்றனர். அவர்களில் பலர் பல்கலைக்கழகத்திற்குச் சென்றனர்.

தொடர்ந்து வந்த கல்வியாண்டிலே ஓர் உண்மையான பா.மொ.க ஆசிரியர் எனும் பதவியை நான் ஏற்கனவே ஏற்றுக்கொண்டிருந்தேன். அதனுடன் தாய்மொழியை வளர்க்கும் பணியிலும் அமர்த்தப்பட்டேன். நான் தன்னாட்டு மொழியை ஒருங்கிணைந்த மற்றும் சுருக்க வகைகளில் கற்பித்தேன். மாணவர்களுக்கு அவர்களுடைய தாய் மொழித் தேர்ச்சியில் அளவு கடந்த வேறுபாடுகள் காணப்பட்டமையும் எனக்கு பாரிய சவாலாக இருந்தது. கற்பித்தல் கருவிகள் எவையுமே இருக்கவில்லை. நாம் எமது பணியில் குறைந்தளவோ பாரியளவிலோ வெற்றி பெற முடிந்தது. உடன் பணிபுரிந்தவர்கள், மாநகராட்சி பள்ளிப் பேரவை, கல்வி ஆணைக்குழு, சமஷ்டிக் கல்வி அமைச்சு, மற்றும் எம் சிறந்த வலைப்பின்னல் என்பவற்றின் துணைவழங்கலாலும் மற்றும் ஒத்தாசையினாலுமே ஆகும். மிகவும் விரைவிலேயே, தன்னாட்டு மொழிக் கல்வி எனும் கொள்கையில் ஐயம் கொண்டவர்களைக்கூட வகுப்பறையிலும் பாடசாலைகளிலும் மட்டுமல்லாது பெற்றோர்களுடன் பணியாற்றும் போதும் புலம்பெயர் நாட்டு சமூகத்துடன் தொடர்பாடும் போதும் நான் பயனுள்ளவனாக இருப்பேன் என்பதை உணரவைத்தது.

பன்மொழி வகுப்புக்களுக்கு பன்மொழி ஆசிரியர்கள் தேவை. 20 வருடங்களின் பின் தற்போது நானும் எனது முன்னாள் மாணவர்களும் ஒன்றாகக் கற்பிக்குமளவிற்கு வெகு தூரம் வந்துவிட்டோம்!

## 2. ஹைறியே ஷேக்கீரி: பா.மொ.க ஆசிரியராக இருத்தல் பெருமையும் பொறுப்புமுள்ள ஒரு பணி

ஹைறியே ஷேக்ரி கொசோவோ/கொசோவா வைச் சேர்ந்தவர். அவர் 1995 வரை சுவீடனில் வாழ்ந்தவர். ஹொன்பி, கரிஸ்க்ரோனா வில் அல்பானியன் பா.மொ.க வகுப்புகள் நடத்தினார். 2007 தொடக்கம் கரிஷாம் இல் அல்பானியன் பா.மொ.க வுக்குப் பொறுப்பாளரானார்.

சுவீடனில் பா.மொ.க ஆசிரியராக இருந்த மிக முற்பட்ட கால நினைவுகள் பல்வேறு காரணங்களால் மிக வலுவான உணர்வுகளுடன் தொடர்புற்றவையாக அமைந்தன. ஒன்று, அப்போது கொசோவாவில் போர் நடந்த காலம். பெருந் தொகையான அல்பானியன் குழந்தைகள் ஏதிலி முகாம்களில் இருந்தனர். பெருந்தொகையானவர்களிடம் வதிவிட ஒப்புதல் ஆவணம் இல்லாதபோதும் பள்ளிகளுக்கு சென்று தங்கள் நாட்டு மொழியில் கற்பிக்க ஒப்புதல் வழங்கப்பட்டது. பலர் போரினாலும் வெளியேற்றப்பட்டதாலும் அதிர்ச்சியடைந்திருந்தனர். எவரும் சுவீடிஷ் மொழி பேசவில்லை. புதிய சமூகத்தையும் பள்ளியையும் விளங்கிக்கொள்ளுதல் அவர்களுக்கு மிக கடினமாயிருந்தது. அதுபோலவே புதிய பழக்கமில்லாத வழக்கங்களும் மரபுகளும் இருந்தன. அவர்கள் மகிழ்ச்சியுடன் தன்னாட்டு மொழிக் கல்வி வகுப்புகளுக்கு சமூகமளித்தமை வியப்பானதொன்று அல்ல. நான் அவர்களுடைய ஆசிரியர் மட்டுமல்ல, ஆனால் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அவர்களுக்கு தாயாகவும், அறிவுரை வழங்குபவளாகவும், அக்காவாகவும், உளவியலாளராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் இருந்தேன்! சுருங்கக் கூறின், நான் அவர்களுடைய மொழி, அவர்கள் பண்பாடு மற்றும் தாய்நாடு என்பவற்றின் அடையாளமாக இருந்தேன். முழு அளவுக்கு அவர்களுடைய அன்பு, அவர்களுடைய வலி, அவர்களுடைய கவலைகள் யாவற்றையும் அறிந்தவள் ஆகினேன். நடுவகத்தில் என்னுடைய பங்கு தன்னாட்டு மொழிக் கல்வி ஆசிரியர் என்பதே அப்பணியினை மிகுந்த உறுதியுடன் நிறைவேற்றினேன். எதிர்பார்ப்புள்ள, சோர்வடையச்செய்யும், பொறுப்புள்ள பணியாக அது அமைந்தது. ஆனால் அது அழகானதும் உளம் நிறையச்செய்வதுமாகும்.

அல்பானியன் பா.மொ.கவுக்கான பொருத்தமான கற்பித்தற் கருவிகளை உண்டாக்குவது பெரு முயற்சியினை வேண்டிநின்றது. அது சுவீடிஷ் பாடவிதானத்துடன் இணையொத்ததாக அமையவேண்டியது (சுவீடனில் பா.மொ.க வழமையான பள்ளி நிகழ்வுடன் அவற்றின் குறிப்பிட்ட பாடவிதானத்துக்கமைய ஒரு பகுதியாக அமைந்துள்ளது). நாம் உண்டாக்கிய கற்பித்தல் கருவிகளுக்கு சுவீடிஷ் பள்ளி நூல்களும் கருவிகளும் பெருமளவு மாதிரிகளாக அமைந்தன. இவற்றை எங்கள் தேவைகளுக்கும் இலக்குகளுக்கும் ஏற்பத் தழுவியமைப்பது பெருமுயற்சியையும் வாண்மையையும் வேண்டிநிற்பதாக அமைந்தது. எமக்கு வேண்டிய திறன்களை சுவீடிஷ் ஆசிரியத் தோழர்களுடனான நாள்தோறும் ஏற்பட்ட நெருங்கிய தொடர்புகளினால் மட்டுமன்றி பிற மொழிக் குழுக்களின் பா.மொ.க ஆசிரியர்களுடனான பிணைப்பினாலும் பெற்றுக்கொண்டோம்.

## 3. பிர்ஸன் யில்மஸ் செங்குல்: பல பொருள்கள் எனக்கு வேறுபட்டவையாக இருந்தன…

பிர்ஸன் யில்மஸ் செங்குல் துருக்கியைச் சேர்ந்தவர். நூர்ன்பேர்க்கில் மூன்று ஆண்டுகளாக வாழ்ந்துவருகிறார், அங்கு துருக்கிஷ் மொழிக்கு பா.மொ.க ஆசிரியராகப் பணிசெய்கிறார்

துருக்கியில் கற்பித்தலுடன் ஒப்பிடும்போது எனக்குப் பல பொருள்கள் அல்லது நிகழ்வுகள் வேறுபட்டவையாக இருந்தன!

ஒவ்வொரு வகுப்பும் பல் அகவை மாணவக் குழுக்களைக் கொண்டமைந்தது. தன்னாட்டு மொழி துருக்கிஷ் கல்வி வகுப்புகள், பிற்பகலில் "வழமையான" வகுப்புகளைத் தொடர்ந்து நடைபெற்றன, இதன் காரணமாக, பல பிள்ளைகளினால் பசியுடன் நன்றாகக் கருத்தூன்ற முடியவில்லை. அத்துடன், நான்கு அல்லது ஆறு மணித்தியாலங்கள் வழமையான வகுப்பறைக் கற்பித்தலின் பின் இரண்டு மணித்தியாலம் துர்கிஷ் கற்பதற்கு அவர்களால் முயற்சி செய்ய முடியவில்லை.

பா.மொ.க வில் பங்குபற்றல் விருப்பத்தேர்வாக இருந்தது, இருக்கிறது. இதன் விளைவாக, பல மாணவர்கள் கட்டாயமற்ற வகுப்புகளுக்கு ஒழுங்கற்ற முறையில் பங்குபற்றுவர் அல்லது முற்றாக பங்குபற்றாமல் விடுவர். மாறாக பலர் வெளியே தங்கள் நண்பர்களுடன் விளையாடுவர் அல்லது தங்குமிடத்தில் மகிழ்வாக இருப்பர். பங்குபற்றியவர்களின் தகைமைத் தரம் பற்றிப் பலவாறு எண்ணவேண்டியுள்ளது. இதன் காரணம் தாய்மொழி வீட்டில் அரிதாகவே, அதுவும் பற்றாக்குறையாகவும் பிழையாகவும் பேசப்பட்டது. பல பெற்றோர்கள் துருக்கிஷ் பிழையாகவே பேசுகின்றனர், அதனுடைய பேச்சு வடிவத்தை அவர்கள் அறிந்திருக்கவில்லை, அப்படியொன்று பற்றி அவர்களுக்கு தெரிந்திருக்கவும் முடியாது.

பா.மொ.க விருப்பத்தேர்வாக இருந்து வகுப்புத் தரங்களுக்கு தொடர்பற்றதால், மாணவர்களின் ஈடுபாடும் செயற்பாடும் மிகக் குறைவே. இக்காரணத்தால், நான் விளையாட்டு முறையில் ஈடுபாட்டினை பெருக்குதற்கு முயற்சித்தேன். ஒரு 15 மணித்துளி விளையாட்டுத் தொடக்கமாகவும் அதைத் தொடர்ந்து துருக்கிஷ் மொழி பற்றிய ஒரு மென்மையான அறிமுகமாவும் ஒவ்வொரு வகுப்பும் இப்போது கட்டமைக்கப்பட்டுள்ளது. அந்த முடிவுக்கு, நான் பிள்ளைகள் துருக்கிஷ் மொழியை நன்றாக விளங்கிக்கொள்ளவும் பயன்படுத்தவும் துணைசெய்யக்கூடிய பல்வகை விளையாட்டுகளைத் தேடி உருவாக்கினேன். இவ்வகையில், அவர்களுடைய ஈடுபாட்டையும் பங்கேற்றலையும் சிறிது சிறிதாக உயர்த்துதற்கு முயன்றேன். அது மிக ஒழுங்காகவும், மேலும் பல மாணவர்களை பா.மொ.க வகுப்புகளுக்கு சமூகமளிக்க ஈர்த்தது.

இன்னொரு வழமையான சிக்கல் என்னவென்றால் இங்கு எங்களை உண்மையான ஆசிரியர்களாக பெற்றோர்களால், மாணவர்களால், சிலவேளைகளில் வயர்ன் மாநில பள்ளி ஆசிரியர்களாலும் ஏற்றுக்கொள்ளாமையாகும். நான் உண்மையான ஆசிரியரா அல்லது கிழமைக்கு ஒரு தரம் துர்க்கிஷ் வகுப்பு எடுக்கும் ஒருவரா என நான் கேட்கப்பட்டுள்ளேன். இத்தகைய இகழ்ச்சிக்கு முதன்மைக் காரணம் பணியாளுகை முறைப்படி நாங்கள் தரங்கள் வழங்குவதற்கு ஒப்புதல் இல்லை, மேலும் எங்கள் தரங்கள் பணியாளுகைமுறைத் தர அறிக்கையுடன் எவ்வித தொடர்பும் அற்றவை. எனவே, பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டங்களுக்கு பெற்றோருடைய பங்கேற்பு மிகக் குறைவானதாகும். மேலும், வழமையான வகுப்பறை ஆசிரியர்களுட் சிலர் பா.மொ.க இன்றியமையாததொன்றல்ல எனக் கருதுகின்றனர். பலர் வெளிப்படையாகவே பெற்றோர் தங்கள் பிள்ளைகளை பா.மொ.கவுக்கு அனுப்பவேண்டாம் என்றும் அவர்களுக்கு மொழிக் குழப்பம் ஏற்படலாம் என்றும் பரிந்துரை செய்கின்றனர்.

துருக்கியில் நான் அறிந்திராத இன்னொரு சிக்கல் என்னவெனில், மாணவர்களின் பெருமளவில் வேறுபடுகின்ற மொழித் தகைமை ஆகும். இதனால், ஐந்தாவது தரத்திலுள்ள ஒரு மாணவன் இரண்டாவது தர மாணவனின் தகைமை உடையவனாக ஆகலாம். துருக்கிஷ் அரசினால் வழங்கப்படும் கற்பித்தல் கருவிகள் எங்களிடம் இருப்பினும், பல்வகை செயற்றிறன் நிலைக்கு அவற்றை எவ்வாறு பொருந்தச் செய்தல் என்பது மிகவும் கடினமாயுள்ளது. ஒரு நாளில் நான் பல்வேறு பள்ளிகளில் கற்பிக்க வேண்டும் என்னும் உண்மை எனக்குப் புதிதாக இருந்தது. இது ஜேர்மன் ஆசிரயர்களுடன் தொடர்பு ஏற்படுத்துவதை கடினமாக்கியுள்ளது. இன்னொரு சிக்கல் என்னவென்றால், ஆரம்பத்தில் முழுமையாக வேறுபட்ட ஒரு பள்ளி முறைமையை நேக்கிச் செல்வதும், அதன் கட்டமைப்பை விளங்கிக்கொள்வதுமாக இருந்தது.

I

## 4. ஹஸிர் மெஹ்மெடி: பழைய புதிய சவால்கள்

ஹசிர் மெஹ்மெடி கொசோவோவைச் சேர்ந்தவர். 17 ஆண்டுகளாக வியென்னாவில் வாழ்கிறார். அங்கு 1999 தொடக்கம் பல்வேறு பள்ளிகளில் அல்பானியன் பா.மொ.க வகுப்புகளில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

பா.மொ.க ஆசிரியராக வியென்னாவில் கற்பிக்கத் தொடங்கியபோது என் வகுப்புகளில் போர் வலயங்களில் இருந்து இடம்பெயர்ந்த பல பிள்ளைகளும் இளையவர்களும் இருந்தார்கள். அரசியற் சூழலால் ஏற்படுத்தப்பட்ட சிக்கல்கள் மன அதிர்ச்சிகளுக்கு (trauma) அப்பால், பல நெறிமுறை கற்பித்தல் இடர்கள் இருந்தன. அன்றிருந்த என் மாணவர்கள் தாயகத்திலிருந்தும் ஒஸ்ரியாவுடன் தொடர்புற்ற பிற மிக எளிமையான கற்பித்தல் நெறிமுறைகளுக்குப் பழக்கப்பட்டவர்களாக இருந்தனர். பெரிய வகுப்புகளில் அவர்கள் செயலற்ற விரிவுரை வடிவமைப்புக்குப் பழக்கப்பட்டதால், பல்துறைச் செயற்பாடுகள் மற்றும் செயற்பாட்டுடன் கூடிய திட்டவட்டமான கற்றல் அவர்கள் அறியாதவை.

இங்கு ஒஸ்ரியாவில், மாணவர்களுடனான தொடர்பு முழுமையாக வேறுபட்டது, அது மாணவர்களுடன் தனித்தனியாக செயற்படவும் மிக விரிவுகளுக்குச் செல்லவும் வாய்ப்பளிக்கின்றது. நானே இத்தகைய வேறு அணுகுமுறைகள், சொல்வன்மைகள், நெறிமுறைகள் ஆகியனவற்றைப் பெரும்பாலும் பா.மொ.க ஆசிரியர்களுக்கு இங்கு வழங்கப்படும் கருத்தரங்குகளிலேயே கற்றுக் கொண்டேன். இது ஒஸ்ரியாவில் ஓர் ஆசிரியராக நான் ஒருங்கிணைவதற்கு இன்றியமையாத பங்களிப்பாகும். தொழில் தோழர்களுடனான பட்டறிவுப் பகிர்வுகள் ஓர் இன்றியமையாத கூறாகும்.

வேறுபட்ட அகவைக் குழுக்கள் மற்றும் திறன் தரங்கள் கொண்ட "பல்வகை வகுப்பு அமைப்பு" என்பதுடன் பணி செய்வது என்பது குறிப்பிடக்கூடிய சவாலுடையதாகும். இத்தகைய பன்முகப்பட்ட வகுப்புகளில் கற்பிப்பது அதன் தனித்துவ நெறிமுறைகள் மற்றும் கற்பித்தற் கோட்பாடுகள், தனித்துவ மற்றும் விரிவான திட்டமிடல் மற்றும் பெருமளவிலான ஆக்கத்திறன் என்பவற்றை வேண்டிநிற்கும். இவற்றுள் கற்றலுக்கான விளையாட்டு அணுகுமுறை மாணவர்களால் மிகவும் விரும்பப்பட்டதாக, விரும்பப் படுகின்றதாக அமைகிறது. இது எளிமையானதாக அமையினும் உண்மையில் இன்னும் சவாலாகவே இருக்கின்றது.

வெற்றியுற்றவை என உறுதிப்படுத்தப்பட்ட மிகச் சிறந்த நடைமுறைகள், எடுத்துக்காட்டாக, சிறப்பாக விளங்கிக்கொள்ளும் ஆற்றலை ஊக்குவிக்கும் இருமொழிக் கற்றல் இசை மற்றும் வகிபாக நாடகங்களூடாகக் கற்றல், இவற்றுடன் எனக்கு பல வழிகளில் உடன்பாடான பட்டறிவுகளைப் பெற்றுள்ளேன். கற்பித்தல் கருவிகளைக் கொள்முதல் செய்யும்போது, இன்று நான் பெரும்பாலும் மாணவர்களை (இணையம், நூலக ஆய்வு) உள்ளடக்குகிறேன் மற்றும் நான் இணையத்தை அல்பானியா ஜேர்மனிய மொழியில் பயன்படுத்துகிறேன்.

## 5. வலேரியா பொவினா: பா.மொ.க புதியவர்களுக்கு சில குறிப்புகள்

வலேரியா பொவினா பொலொக்னா / இத்தாலியிலிருந்து வருகிறார். இவர் 2009 முதல் சூரிச்சில் இத்தாலியன் பா.மொ.க வில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

ஒரு புதிய நாட்டில், ஒரு புதிய பள்ளி அமைப்பில், ஒரு புதிய பள்ளிப் பண்பாட்டில், புதிய கட்டமைப்புகளில் முதலாண்டு ஆசிரியராக இருப்பது என்பது கடினமானது! இது தொடர்பாக என்னுடைய பட்டறிவுகளை ஒழுங்கமைக்கவும் சில பரிந்துரைகளை வழங்கவும் முயற்சித்தேன். அவை தொடங்கும் அல்லது புதிதாக வரும் தொழில்சார் தோழர்களுக்கு துணைசெய்கின்றன மற்றும் பா.மொ.க ஆசிரியர் என்னும் கடினமான (demanding) ஆனால் அழகான பணியின் மென்மையான தொடக்கத்தை எளிமையாக்குகின்றன.

### பள்ளி நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கான குறிப்புகள் (மற்றும் கட்டமைப்பைப் பொறுத்து பள்ளிச் சபையுடன்)

- உங்களை அறிமுகப்படுத்த ஒரு முன்னேற்பாட்டினைச் செய்யவும்
- கூட்டுறவுக்கான ஏற்பினையும் விருப்பினையும் காட்டுதல்
- பள்ளியின் விடுமுறை அட்டவணை மற்றும் உள்ளக நிகழ்வுகள் (விளையாட்டு நாள், பாசறைகள், வாண்மை மேம்பாடு, முதலியன) பற்றிக் கேட்டறிக
- பள்ளி தொடர்பான உள்ளக பழக்க வழக்கங்கள் (ஆசிரியர் அறைக் கோப்பி இயந்திரம், கதவுகள் மூடல்...) பற்றி நீங்களே அறிந்துகொள்ளுங்கள்.
- நிறுவன மற்றும் உட்கட்டமைப்புச் சிக்கல்கள் (பிரதிகள் எடுக்கும் இடத்தின் நிலை) பற்றி நீங்களே அறிந்துகொள்ளுங்கள்.
- போதுமான வகுப்பறைகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்தவும் (சில வேளைகளில் பொருத்தமற்ற வகுப்பறைகள் பா.மொ.க வகுப்புகளுக்கு ஒதுக்கப்படுகின்றன, ஏனெனில் "வெளிநாட்டுப் பிள்ளைகள்" எல்லாவற்றையும் தொடுவதுடன் ஒலியரவம் ஏற்படுத்துவர்...)
- முரண்பாடு ஏற்படுமிடத்து, தொடர்பான பா.மொ.க ஒருங்கிணைப்புப் பணியகத்துடன் தொடர்பு ஏற்படுத்தவும் (துணைத்தூதர், ஆசிரியர் சங்கம்...), உள்ளூர் கல்வி அதிகாரிகள் அல்லது ஒன்றியம்

## பள்ளிப் பராமரிப்பு சேவைகளைக் கையாளுதற்கான குறிப்புகள்

(வாயிற்காவலர் அல்லது பராமரிப்பு சேவைகளின் தலைவர் பள்ளியில் பெரும்பாலும் நடுவண் ஆளாகத் திகழ்பவர், அவர் ஒரு தாழ்நிலைக் காவலாளி அல்ல!)

- உங்களை அறிமுகப்படுத்த ஒரு முன்னேற்பாட்டினைச் செய்யவும்
- பள்ளி விதிமுறைகளை அறிந்துகொண்டு அவற்றைப் பின்பற்றவும் (பாடசாலை வளாகம் மற்றும் விளையாட்டுத் துணைக்கருவிகள், வகுப்பறையில் உண்ணுதலும் குடித்தலும், குப்பை... தொடர்பான விதிகள்)
- பள்ளிக்கான திறப்புகளைப் பெற்றுக்கொள்க. அவற்றைப் பொறுப்பாகவும் பாதுகாப்பாகவும் சேமிக்குக.
- ஏதாவது பிழை ஏற்படின் மன்னிப்புக் கேட்கவும்...

## வழக்கமான பாடவிதான வகுப்பு ஆசிரியர்களைக் கையாளுதற்கான குறிப்புகள்

- உங்களை அறிமுகம் செய்க, எ.டு. ஆசிரியர் அறையில் அல்லது பள்ளி கருத்தரங்கு போன்றவற்றினைத் தேடி தொடர்புகளை ஏற்படுத்துக.
- கூட்டுறவுக்கான ஏற்பினையும் விருப்பினையும் காட்டுதல்.
- ஒரு குறிப்பிட்ட மொழிக்கும் பண்பாட்டுக்குமான வள வல்லுநராக பள்ளிக்கு வர விருப்பினை வெளிக்காட்டவும்.
- உள்ளூர் ஆசிரியர்கள் தொடக்கத்தில் மனம் விட்டுப் பழகாது ஒதுங்கி நிற்பின் அதற்காக ஊக்கம் கெடவேண்டாம்.
- உள்ளக பள்ளியின் வழக்கங்கள் (கோப்பி இயந்திரம், பிரதி இயந்திரம், முதலியன) பற்றி உசாவுக.
- பா.மொ.க வின் செயற்பாடு இன்றியமையாமை பற்றி விளங்கப்படுத்த முயற்சிக்கவும், அக்கறை உள்ளவர்களை ஒரு பரிமாற்றத்துக்கு மற்றும் இருவழி வகுப்பு வருகைகளுக்கு அழைக்கவும்.

## பெற்றோர்களைக் கையாளுதற்கான குறிப்புகள்

- உரையாடல்கள் மற்றும் பெற்றோர்-ஆசிரியர் மாநாடுகள் (ஒவ்வொரு ஆண்டிலும் குறைந்தது இரண்டு தடவை) ஊடாக நல்ல தொடர்புகளை வளர்த்துப் பேணுக.
- உங்கள் கற்பித்தலின் உள்ளடக்கம், இலக்குகள், நெறிமுறைகள் பற்றி அளிக்கை செய்க.
- இன்றியமையாத ஆசிரியக்கலை மற்றும் கற்பித்தல் நெறிமுறைக் கூறுகளை விளக்குக.
- பெற்றோர் மற்றும் ஆசிரியரின் பங்கினை தெளிவாக்குதல்.
- நியாயமாக, அமைதியாக, திறந்தநிலையாக இருக்கவும், ஆனால் ஏற்படக்கூடிய விமரிசனத்துக்கு மறுமொழியாக தெளிவும் தீர்மானிப்பும் வாண்மை மேம்பாடு மற்றும் பண்பாட்டுக் கொடைகளுக்கான குறிப்புகள்.

- உள்ளூர் வாண்மை மேம்பாடு பற்றித் தெரிந்துகொள்க, இவ்வாய்ப்புகளை நீங்கள் பெற்றுக்கொள்க (ஆசிரியக்கலை நிறுவகங்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், கல்வித் திணைக்களம், முதலியவற்றின் கொடைகள் பள்ளி நிர்வாகத்திடமிருந்து மேலும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்)
- உள்ளூர் மொழியினை நன்கு அறிந்துகொள்ள கற்கை நெறிகளுக்குச் செல்லவும் (ஒருங்கிணைப்புக்கும் கூட்டுறவுக்கும் இன்றியமையாதன!)
- புதிய வாழ்விட பண்பாட்டு வாழ்வு பற்றி அறிந்துகொள்க. (பண்பாட்டு நிகழ்வுகள், அரும்பொருளகங்கள், நூலகங்கள், மன்றங்கள், நிழ்ச்சிகள், மாணவர்களுக்கான கொடைகள்...)

## வகுப்புக்கு முன்னும் பின்னும்...

- வகுப்புத் தொடங்குவதற்கு முன் குறைந்தது 10 மணித்துளிகளுக்கு முன்னர் வகுப்பறைக்கு வருக (ஒழுங்கமைப்புக்கும் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்யவும் இந்த நேரத்தை ஒதுக்குக)
- வகுப்பைத் தொடர்ந்து எல்லாவற்றையும் (பலகை, மேசைகள், நிலம்...) அவற்றின் முன்னைய நிலையிலும் இடத்திலும் மீள அமைப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

I